Regristeed as a Newspaper

COMMERCE
வகுப்புக்கள்
88 Aug.
ஆரம்பம்: 1-02-86
சனி காலை 8 மணி
விபரங்கட்கு:
New Master
Institute
BMC Lane, Jaffna.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
விலை ரூ-1/=

COMMERCE
வகுப்புக்கள்
88 August
பொருளியல் - திரு. குமாரவேல்
கணக்கியல் - திரு. மரியதாஸ்
வர்த்தகம் - திரு. ஜெயராமன
இந்து
நாகரிகம் - திருமதி அருள்நங்கை
அளவையியல் - திரு. சந்திரராசா
தமிழ் - திரு. பாலா
New Master
Institute
BMC Lane, Jaffna.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ௵ மாசி ௴ 5 ௳ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1406 ஜமா ஆகிர் பிறை 7 (17-02-1986) UTHAYAN - A LIVELY TAMIL DAILY கதிர்:78

குறிஞ்சாத்தீவில்

படைகள் - போராளிகள் நேற்று உக்கிரப் போர்

இராணுவத்தில் 52 பேர் மாண்டதாக ரெலோ அறிக்கை

இரண்டு பேர் மட்டும் என்கிறது அரசு

குண்டு மாரியால் பொதுமக்களில் பலர் இறந்திருக்கலாம் என அச்சம்

— உதயன் செய்தியாளர்கள்: வனிதராஜன், கே. இரத்தினராஜசிங்கம் —

யாழ்ப்பாணம், பெப். 17

குறிஞ்சாத்தீவில் நேற்றுக்காலை போராளிகளுக்கும் அரசபடையினருக்கும் இடையில் கடும் சமர் நடைபெற்றது. குறிப்பாக இருபது நிமிட நேரம் நடந்த உக்கிரப் போரில் படையினர் தரப்பில் பெரும் எண்ணிக்கையில் ஆட்சேதம் ஏற்பட்டதாகச் சொல்லப்பட்டது.

குறிஞ்சாத்தீவு மோதலில் படையினர் மொத்தம் 52 பேர் மாண்டதாக தமிழீழ விடுதலை இயக்கம் சென்னையில் நேற்று மாலை விடுத்த அறிக்கையில் தெரிவித்தது.

ஆனால் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள், இரண்டு சிப்பாய்கள் மட்டுமே இறந்ததாகவும், 4 பேர் காயம் அடைந்ததாகவும் தெரிவித்தன.

குறிஞ்சாத்தீவுச் சமரின் எதிரொலியாக நடத்தப்பட்ட பதில் தாக்குதலின்போது மாரி மழை பொழிவதுபோல் வானத்திலிருந்து குண்டுகள் தீர்க்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

வீதியால் சென்ற கார்கள், மினிபஸ்கள் என்பன சுற்றி வட்டமிடப்பட்டு, கலைத்துக் கலைத்துச் சுடப்பட்டன.

எதிரொலிச் சம்பவத்தில் பொது மக்களில் பத்துப் பேருக்கு மேல் இறந்திருக்கலாம் என அஞ்சப்பட்டது. இருபதிற்கும் மேற்பட்டோர் காயமுற்றனர்.

மினிவானில் சென்ற மூன்று பேரும் விமானத்தில் இருந்து வந்த குண்டு பட்டு மரணமானார்கள்.

இச்சம்பவம் குறித்து அறியப்படுவதாவது:-

ஆயுதப் படையினருக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து அவர்கள் நேற்று அதிகாலை சுமார் 4.15 மணியளவில் ஆனையிறவுக்கும், இயக்கச்சிக்கும் இடையில் உள்ள குறிஞ்சாத்தீவுப் பகுதியில் தேடுதல் வேட்டைக்குச் சென்றனர்.

அவர்கள் கவசவாகனங்கள், ஈ. எல். எவ். டிரக்குகள் மற்றும் ஒரு இ. போ. ச. பஸ் ஆகியவற்றில் போராளிகளின் முகாமை நோக்கிச் சென்றனராம்.

அத்தருணம் போராளிகள் படையினரை எதிர்கொண்டு நேரடித் தாக்குதலில் ஈடுபட்டதாகத் தெரியவருகிறது.

இருசாராருக்கும் இடையில் நீண்ட நேரம் சமர் இடம் பெற்றது.

குறிப்பாக 20 நிமிடம் நடைபெற்ற உக்கிரச் சண்டையில்போராளிகள் புதிய ரக துப்பாக்கிகள், (4ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்திமுரளி

ஓ, யாழ்ப்பாணத்திலை மழை குறைவு தானே, அதை ஈடு செய்யிறதுக்கு, குண்டு மழை பொழிந்து விடுவோம் எண்டு தயவு காட்டுகினம் போலை. இதுவும் செய்வினம். இன்னமும் செய்வினம் ஏன், செய்ய மாட்டினம்!

காயமடைந்தோர் விவரம்

நல்லூர், பெப். 17

நேற்று பளை, எழுதுமட்டுவாள், மிருசுவில், தாளையடி ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற ஹெலிக்கொப்டர் தாக்குதல்களின்போது காயமடைந்து யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்போர் விபரம்:

1. சுந்தரம் திருவானந்த மூர்த்தி (18 வயது) எழுதுமட்டுவாளைச் சேர்ந்தவர். இவருக்கு கை, தலை, முதுகு ஆகிய இடங்களில் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

2. செல்வராசா பாஸ்கரன் (வயது 11). பளையைச் சேர்ந்தவர். இவருக்கு கைமூட்டில்காயம்.

3. திரு என். சௌரி, (வயது 26) யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்.

4. சின்னப்பு முருகேசு (63 வயது) தாளையடி வாசி. இவருக்கு நெஞ்சில் காயம். 4 பிள்ளை (4ஆம் பக்கம் பார்க்க)

ரெலோ அறிக்கை

சென்னை, பெப். 16

'ரெலோ' இயக்கம் சென்னையில் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

16-02-1986 அன்று அதிகாலை 4-15 மணிக்கு குறிஞ்சாத்தீவில் அரச இராணுவத்திற்கும் எமக்கும் இடையே நடைபெற்ற மோதலில் 52 அரச இராணுவத்தினர் அழிக்கப்பட்டனர்.

எமது முகாம் ஒன்றை சுற்றிவளைக்க முற்பட்ட அரச பயங்கரவாதிகளே அழிக்கப்பட்டனர்,ஈ.எல்.எவ் டிரக், 2 கவச வாகனங்கள் ஆகியவற்றிலும் இ. போ. ச. பஸ் ஒன்றிலும் எமது முகாமை நோக்கி வந்தவர்களே இவர்கள்.

ஈ. எல். எவ். டிரக்கில் 15 பேரும் இரண்டு கவச வாகனங்களிலும் 40 பேரும் இருந்துள்ளனர். போதல் நடைபெறும் சமயம் நான்காவதாக வந்த இ. போ. ச. பஸ் ஆனையிறவு முகாம் அருகிலேயே நின்றுவிட்டது. இதில் மேஜர் ஸ்ரீபன் இருந்துள்ளார்.

முன்னால் வந்த மூன்று வாகனங்களும் முற்றாக சேதமடைந்தன மூன்று லெப்டினன்ட், 8 கோப்ரல்கள், மூன்று சார்ஜன்ட், 38 சிப்பாய்கள் அழிக்கப்பட்டனர். நவீன ரக துப்பாக்கிகள், லோஞ்சர்கள் எம்மால் பாவிக்கப்பட்டன. 3 அரச இராணுவத்தினரே தப்பியுள்ளனர்.

சுமார் 20 நிமிடம் நடைபெற்ற தாக்குதலின் பின்னரே 52 அரச இராணுவத்தினரும் அழிக்கப்பட்டனர். எமது தரப்பில் எவ்வித சேதமுமில்லை.

ஜே. ஆருடன் தான் இனி இந்தியா பேசும்

அத்துலத் 'அவுட்!'

புதுடில்லி, பெப். 16

இனப்பிரச்சினை சம்பந்தமாக பேச்சுக்களை மீண்டும் நடத்துவதில் காணப்படும் முட்டுக்கட்டைகளை நீக்குவதற்கு திரு. ஜெயவர்த்தனவுடன்தான் இனிமேல் பேச வேண்டும்.

திரு. லலித் அத்துலத் முதலியுடன் இனியும் பேச்சுக்களை நடத்த வேண்டும் என்பதில் இந்திய அரசுக்கு அக்கறை இல்லை.

இவ்வாறு இந்திய அரசுடன் நெருங்கியதொடர்புள்ள மூத்த பத்திரிகையாளரான திரு. ஜி. கே. ரெட்டி 'இந்து' நாளிதழில் எழுதியிருக்கும் கட்டுரையில் தெரிவித்திருக்கிறார்.

திரு. ரெட்டி மேலும் தெரிவித்திருப்பதாவது:-

இந்தியாவில் உள்ள இலங்கைத் தூதர் பெர்னாட் திலகரத்தின இந்திய வெளியுறவுச்செயலாளர் திரு ரொமேஷ் பண்டாரியை மீண்டும் சந்திக்க இருக்கிறார்.

இந்தியாவின் கோரிக்கைமீது இலங்கைஜனாதிபதி ஜெயவர்த்தனவிடம் இருந்து பெற்ற மேலதிக விளக்கங்களை அச்சந்திப்பின்போது திரு. திலகரத்தின திரு. பண்டாரியிடம் எடுத்துக்கூறுவார்.

இராணுவத் தீர்வில் நாட்டம் இல்லை என்ற உறுதிமொழியை இலங்கையிடம்இருந்து பெறுவதில் மட்டும் இந்தியா ஆர்வம் காட்டவில்லை.

பிரச்சினைக்குரிய பகுதிகள் நிறைந்த கிழக்கு மாகாணத்தில்தமிழரைக் கொல்வது, அவர்களின் வீடுகளை எரிப்பது, சொந்தப் பூமியில் இருந்து அவர்களை விரட்டியடிப்பது போன்றசெயல்களில் ஆயுதப் படையினர் ஈடுபடுவதை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்கும்படியும் திரு. ஜெயவர்த்தனவை இந்தியா வற்புறுத்தி உள்ளது.

யுத்த நிறுத்தமும் பேச்சும்

யுத்த நிறுத்தம் சரியான முறையில் அமுல் நடத்தப்படத் தொடங்கிய பின்னர்தான்மேலும் (4ஆம் பக்கம் பார்க்க)

தொண்டமான் மீது நம்பிக்கை இல்லாப் பிரேரணை

சுதந்திரக் கட்சி கொண்டு வருகிறது

கொழும்பு, பெப். 17

அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வர சுதந்திரக் கட்சி தீர்மானித்து உள்ளது.

நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடரின் போது இந்த நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டுவரப்படும் என்று சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் கூறின.

மலையகத் தமிழர் குடியுரிமைச் சட்டம் கொண்டு வரப்பட்டது முதல் சுதந்திரக் கட்சி அமைச்சர் தொண்டமான் மீது கண்டனக் கணைகளை தொடுத்து வந்துள்ளது (4 ஆம் பக்கம் பார்க்க)

பண்டாரிக்கு முறையான அழைப்பு

இலங்கை அரசு விடுத்தது

புதுடில்லி, பெப். 16

இலங்கைக்கு விஜயம் செய்யும்படி இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரிக்கு முறையான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசின் இந்த அழைப்பை கடந்த வாரம் இலங்கைத் தூதர் திரு. பெர்னாட் திலகரத்தின திரு. பண்டாரியிடம் கையளித்தார்.

அழைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டதா, இல்லையா என்பது பற்றி இந்தியா பக்கத்தில் இருந்து எந்தவித தகவலும் இலங்கைக்கு இன்னும் வரவில்லை.

குண்டு மழை

கடை ஓடுகளை துளைத்து வந்து என்மேல் பட்டது

வயோதிபர் சொல்கிறார்

நல்லூர், பெப் 17

விமானத்தில் இருந்தும் ஹெலிக்கொப்டரில் இருந்தும் மழை போல் குண்டுகள் பொழிந்தன எனது கடை ஓடுகள் வெடித்துச் சிதறின. எனக்கும் எனது பேரனுக்கும் காயங்கள் ஏற்பட்டன.

தாளையடியில் பல சரக்குக் கடையும், தேநீர்க் கடையும் வைத்திருந்த (4 ஆம் பக்கம் பார்க்க)

மினிபஸ் மீது ஹெலிக்கொப்டர் சுட்டது

என் கண் முன்னாலேயே மூவர் சுருண்டு விழுந்தனர்

காயமடைந்தவர் தகவல்

நல்லூர், பெப். 17

பஸ்ஸினுள் மரண ஓலம் கிளம்பியது. என் கண் முன்னால் பஸ்ஸினுள் மூவர் சுருண்டு விழுந்து இறந்தார்.

வேறு சிலர் பஸ்ஸினுள் படுத்திருந்தபடி ஆண்டவனை வேண்டிக் கொண்டிருந்தனர்.

நேற்றைய சம்பவத்தில் மயிரிழையில் உயிர் தப்பிய சுந்தரம் திருவானந்தமூர்த்தி (18 வயது) இப்படிச் சொன்னார்.

அவர் சென்றுகொண்டிருந்த பஸ் முகமாலை என்னும் இடத்தில் வைத்து ஹெலிக்கொப்டர் தாக்குதலுக்கு இலக்கானது.

சுந்தரம் திருவானந்தமூர்த்திக்கு கை, தலை, முதுகு ஆகியவற்றில் (4–ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்

17.2.1986
திங்கட்கிழமை
சுபநேரம்:
12.33 முதல் 2. 03வரை
ராகுகாலம்:
8.03 முதல் 9 33 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
அட்டமி பி.ப.2.59 வரை

அமிர்தலிங்கத்தை இந்திய எம். பியாக்க தீவிர முயற்சி

சென்னையில் பலமான வதந்தி

சென்னை, பெப். 16

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கத்தை, இந்திய லோக சபைக்கான இடைத் தேர்தலில் போட்டியிட வைத்து எம். பியாக்குவதற்கு தீவிர முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வாறு தமிழகத்தில் இப்போது பலமாகப் பேச்சடிபடுகிறது.

திரு. அமிர்தலிங்கம் தேர்தலில் போட்டியிடுவதற்கு வசதியாக தமிழகத்தில் இந்திரா காங்கிரஸ் எம். பி ஒருவர் தமது பதவியை இராஜினாமாச் செய்து வழிவிடுவார்.

திரு. அமிர்தலிங்கத்திற்கு மத்திய அரசு இந்தியாவின் கௌரவப் பிரஜை அந்தஸ்து வழங்கும்.

பிரஜாவுரிமைகிடைத்ததும் திரு. அமிர்தலிங்கம் இடைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்பு மனு தாக்கல் செய்வார்.

பிரதான எதிர்க்கட்சிகள் எதுவும் அவரை எதிர்த்து இந்த இடைத் தேர்தலில் போட்டியிட மாட்டா.

ஐக்கிய நாடுகள் சபை போன்ற சர்வதேச அமைப்புகளில் இலங்கைப்பிரச்சினையை எடுத்துரைக்கும் ஒரு பிரதிநிதியாக அங்கம் வகிப்பதற்கும் —

இலங்கைத் தமிழர் (4 ஆம் பக்கம் பார்க்க)

காரை வட்டமிட்டு முன்னே வந்து சுட்டது ஹெலிக்கொப்டர்

காயமடைந்தவர் தகவல்

நல்லூர், பெப். 17

எழுதுமட்டுவாளடியில் நாம் வந்து கொண்டிருந்த காரை சுற்றிச் சுற்றி ஹெலிக்கொப்டர் வட்டமிட்டது.

காரை நிறுத்தி விட்டு இறங்கி ஓடுவோம் என நான் சாரதியிடம் சொன்னேன். ஆனால் அவர் நிறுத்தவில்லை. ஹெலிக்கொப்டரில் இருந்து வந்த சூடுபட்டு (4 ஆம் பக்கம் பார்க்க)

ஈரோஸ் கடத்திய

பிரிட்டிஷ் பெண் இன்று விடுதலை

சென்னை, பெப். 17

முல்லைத்தீவில் வைத்துக் கடத்தப்பட்ட பிரிட்டிஷ் பெண் வில்லிஸ் பெனிலோப்பை திங்கட்கிழமை (இன்று) விடுதலை செய்யப் போவதாக ஈழப்புரட்சி அமைப்பு (ஈரோஸ்) அறிவித்துள்ளது.

ஈரோஸ் இயக்கம் சென்னையில் வெளியிட்ட அறிக்கையில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

எனினும் அவர் விடு (4-ம் பக்கம் பார்க்க)

ரயில் பயணிகளுக்கு உயிர் போய் வந்த அதிர்ஷ்ட அனுபவம்!

யாழ்ப்பாணம், பெப். 17

நேற்று யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் சென்ற ரயில் பயணிகளுக்கு அசாதாரணமான அனுபவம் ஒன்று கிடைத்தது.

தாங்கள் அனைவரும் உயிர் தப்பிச் சென்றது தெய்வச் செயல் என்று அவர்கள் பேசிக் கொண்டனர்.

இந்தச் சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

நேற்றுக்காலை நிகழ்ந்த குறிஞ்சாத்தீவு சம்பவத்தின் பின்னரும் கொழும்பிலிருந்து வந்த ரயில் மதியம் வழமைபோல் திரும்பிச் சென்றது.

ஆனையிறவில் வைத்து ரயில் சோதனைக்காக சில இராணுவ சிப்பாய் (4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

மனைவி வந்ததும் தாயை மறக்கலாமா?

ஹாஸ்ய நடிகர் தங்கவேலு தனது ஒன்பதாவது வயதில் நாடக உலகில் புகுந்தவர். அவரின் சொந்த ஊர் காரைக்கால்.

தங்கவேலு நாடகத்தைப்பற்றிய எல்லா நுணுக்கங்களையும் அறிந்தவர். அவரின் வசன உச்சரிப்பு ஒரு தனிப்பாணியில் அமைந்தது.

கலைவாணரின் ''பணம்'' படம்தான் அவரைத் திரையுலகில் பிரபலப்படுத்தியது.

படங்களில் வசனத்தில் அவர் கொடுக்கும் அழுத்தமும் வேறுபாடும் ரசிகர்களுக்கு சிரிப்பை பீரிட்டு வரச் செய்யும்.

கேட்பவர் தங்கவேலு

கற்பனை வளம் மிக்கவர். சொந்தமாகப் பேசுவதில் மகா சமர்த்தர். ஆபாச வசனங்கள் பேசாமலேயே ரசிகர்களைச் சிரிக்க வைத்து விடுவதில் வல்லவர்.

சினிமாவில் நடிக்க ஆரம்பித்து, புகழும் பணமும் வந்த பிறகும் நாடகங்களில் நடிப்பது குறித்து அவர் இப்படிக் கூறுகிறார்.:

'மனைவி வந்ததும் பெற்ற தாயை மறப்பது எவ்வளவு பெரிய குற்றமோ, அதை விட கொடுமையானது நாடகத்திலிருந்து சினிமாவுக்குப் போய், நாடகத்தை மறப்பது.

இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னரும் நான் ஓரளவு ஆரோக்கியத்துடன் இருக்கிறேன். அதற்கு காரணமே நாடகத்தில் நடிக்கும் போது கிடைக்கும் உடற்பயிற்சி தான்'' என்ருர்.

அவர் தமது ஆசை பற்றி குறிப்பிடுகையில்,

''கடைசி வரையிலும் நடித்துக் கொண்டே இருக்க வேண்டும் - மக்களை சிரிக்க வைக்க வேண்டும். - இதுதான் என் ஆசை.

கலைஞர்களை மக்கள் மதிக்காத காலம் மலையேறி விட்டது. ஒரு நடிகர் நாட்டை ஆளுகின்ருர்.

அதுவும் என் ஆருயிர் நண்பர், மக்கள் திலகம் எம். ஜி. ஆர். அவர்கள் தமிழ் நாட்டை ஆளும் காலத்தில் நானும் வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்பதை நினைத்து நான் பெருமைப்படுகிறேன்- மகிழ்ச்சியுறுகிறேன்'' என்கிருர் டணுல் தங்கவேலு.

தினசரி சினிமா

நட்ட ஈடு வேண்டும்

புதுடில்லி, பெப்.16

தென் யேமனில் இடம் பெற்ற உள்நாட்டுச் சண்டையில் கொல்லப்பட்ட இந்தியப் பிரஜைகளின் குடும்பங்களுக்கு நட்ட ஈடு வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வெற்றி வரலாற்று ரீதியானது

மார்க்கோஸ் பெருமிதம்

மணிலா, பெப். 16

பிலிப்பீன்ஸ் ஜனதிபதி பேர்டினன்ட் மார்க்கோஸ் தான் மீண்டும் ஜனதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டது வரலாற்று ரீதியான நிகழ்ச்சியாகும் என தெரிவித்துள்ளார்.

மார்க்கோஸ் ஜனதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பதை பிலிப்பீன்ஸ் தேசிய மன்றம் ஏற்கெனவே அறிவித்துவிட்டது.

இந்த அறிவிப்பையடுத்து அவர் தனது வெற்றியை ஜனதிபதி மாளிகையில் கொண்டாடிய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தனது ஆதரவாளர்கள் மத்தியில் பேசியபொழுது:

இந்த வெற்றி ஜனநாயகத்துக்கும், நீதிக்கும் மக்கள் கௌரவத்துக்கும் கிடைத்த வெற்றியாகும்.

இந்தத் தேர்தல் வழமையான தேர்தல்களை விட கூடுதலான சிரமங்களின் மத்தியிலேயே வெல்லப்பட்டது. — இவ்வாறு தெரிவித்தார்.

தனது ஆட்சிக் காலத்தில் புதிய பல திட்டங்களை வகுத்து செயற்படுத்தப் போவதாகத் தெரிவித்துள்ள மார்க்கோஸ், திருமதி அக்கியுனோவையும் அதற்கு தன்னுடன் ஒத்துழைக்குமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

தேர்தல் அறிவிப்பை அடுத்து திருமதி கொருசன் அக்கியுனோவும் அவரது ஆதரவாளர்களும் வெளிநடப்புச் செய்தனர்.

தேர்தல் அறிவிப்பு பிழையானது எனவும் இதை எதிர்த்து பெரிய அளவிலான பொதுக்கூட்டமொன்று நடத்தப் போவதாகவும் திருமதி கொருசன் தெரிவித்திருந்தார்.

தேர்தலில் வெற்றி தமக்குத்தான் என மார்க்கோஸும் திருமதி அக்கியுனோவும் ஏற்கனவே உரிமை கோரியிருந்தனர்,

அரசு சார்பு செய்திகள் மார்க்கோஸ் வென்றிருப்பதாகவும் பொது இயக்கமொன்று திருமதி அக்கியுனோவே கூடிய வாக்குகளைப் பெற்றுள்ளார் எனவும் கூறிவந்தன.

அமெரிக்காவும் தேர்தலில் ஊழல் நடந்திருக்கிறது என்பதை ஒப்புக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதே குற்றச்சாட்டை பிலிப்பீன்ஸிலுள்ள கத்தோலிக்க மேற்றிராணிமார் கூறியதற்காக அவர்கள்மீது மார்க்கோஸ் சீறிப் பாய்ந்துள்ளார்.

நட்சத்திரப் போர் திட்டம் கைவிடப்பட்டால்

அணு ஆயுத பயமில்லா யுகம்

மாஸ்கோ, பெப் 16

அமெரிக்க நட்சத்திரப் போர்த் திட்டத்தைக் கைவிட்டால்,

அடுத்த நூற்ருண்டு அணு ஆயுத பயம் இல்லாத யுகமாக இருக்கும்.

இப்படி ரஷ்யத் தலைவர் மிக்கெய்ல் கோர்பச்சேவ் கூறியுள்ளார்.

ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களின் மேயர்களுக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெனீவா உச்சி மாநாட்டில் ரஷ்யா தெரிவித்துள்ள யோசனைகள் யதார்த்த பூர்வமானவை, நடைமுறைப் படுத்தக்கூடியவை - என்றும் ரஷ்யத் தலைவர் வர்ணித்தார்.

நட்சத்திரப் போர்த்திட்டம் தொடர்ந்தால், அணுஆயுத பயமில்லாத உலகு ஒன்றைக் காணும் நம்பிக்கையை அது சிதறடித்துவிடும் என்றும் திரு. கோர்பச்சேவ் கூறியுள்ளார்.

ஹெயிட்டி டுவாலியர் பிரான்ஸுக்கு தலையிடி

அகதி அந்தஸ்துக்கு விண்ணப்பித்தது காரணம்

பாரீஸ், பெப் ,16

நாட்டைவிட்டு தப்பியோடிய ஹெயிட்டி ஜனதிபதி டுவாலியர் பிரான்ஸுக்கு தலையிடி ஒன்றைக் கொடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அரசியல் அகதியென்ற அந்தஸ்து தனக்கு வழங்கப்படவேண்டுமென பிரான்ஸிடம் இப்பொழுது அவர் விண்ணப்பித்துள்ளார்.

8 நாட்களுக்கு மேல் தொடர்ந்து அங்கிருக்க பிரான்ஸ் அனுமதிக்கப் போவதில்லை என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது

அகதி அந்தஸ்துக்காக விண்ணப்பித்துக் கொண்டே தான் நாட்டைவிட்டு செல்வதாக டுவாலியர் குறிப்பிட்டது பிரான்ஸ் அரசின் முகத்திலறைந்தது போலாகும் என கருத்து கூறப்பட்டது.

எனினும் வெகுவிரைவில் பிரான்ஸிலிருந்து டுவாலியர் வெளியேற்றப்பட்டு விடுவார் என பிரதமர் லோறெண்ட் வேபியஸ் தெரிவித்துள்ளார்.

பிலிப்பின்ஸ் இராஜதந்திரி இராஜினமா

மணிலா, பெப் 16

பிலிப்பீன்ஸ் தேர்தல் தீர்ப்பு மக்களின் விருப்பத்துக்கு மாருனது என ஆட்சேபித்து பிலிப்பின்ஸ் இராஜதந்திரியொருவர் பதவி விலகியுள்ளார்.

மேற்கு ஜேர்மனியில் பிலிப்பீன்ஸ் தூதுவராக டணியாற்றிய ருெமான் டெல் ருெசாறியோ (வயது 67) என்பவரே பதவி விலகிய இராஜதந்திரியாவர்.

வெளி உலகில்

கொண்டுரா கொலைகள்

வாஷிங்டன், பெப் 16

கொண்டுராவில் பல கொலைகளையும் சித்திரவதைகளையும் தன்னல் பயிற்றப்பட்ட கொண்டுரன் கொமாண்டோப் படையினர் நடத்தி வருகிருர்கள் என்ற குற்றச்சாட்டை மத்திய புலனய்வு நிறுவனம் (சி. ஐ. ஏ.) பகிரங்கமாக மறுத்துள்ளது. கியூபாவின் புலனய்வுப் பிரிவே செய்திகளைத் திரிப்பதாகவும் கண்டித்துள்ளது

போரை நிறுத்த கோரிக்கை

பாக்தாத், பெப் 16

ஈராக் - ஈரான் யுத்தத்தை நிறுத்துமாறு இரு நாடுகளையும் கோரும் தீர்மானம் ஐ. நா. பாதுகாப்பு சபையில் நிறைவேற்றப்பட்டது.

தெ. ஆ. விடுதலைத் தலைவர்:

நெல்சன் மண்டெலா வைத்தியசாலையில்

ரெலிவிஷனில் கவனித்ததாக வின்னி மண்டெலா கூறுகிருர்

லண்டன். பெப், 16

தென் ஆபிரிக்க கறுப்பின தேசியவாத தலைவர் நெல்சன் மண்டெலாகேப் டவுண் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளார் என்று நம்பப்படுகிறது.

பிரிட்டிஷ் வர்த்தக ஒளிக்காட்சி சேவையின் செய்தி நிகழ்ச்சியிலேயே மண்டெலா வைத்தியசாலைக்கு அவசரமாகக் கொண்டுசெல்லப்பட்டது கவனிக்கப்பட்டது.

மண்டெலா சிறையில் சுகமாக இருப்பதாக அரசு கூறினலும் தொலைக்காட்சியில் காட்டப்பட்ட வைத்தியசாலையில் தான் கண்டது தனது கணவரே என திருமதி வின்னி மண்டெலா தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே திருமதி மண்டெலா நடத்த விருந்த பத்திரிகையாளர் மாநாடொன்றை தென் ஆபிரிக்க நீதிபதி தடை செய்துள்ளார்.

இந்தமாநாடு ஜோஹனஸ்பேர்க்கை அடுத்துள்ள அலெக்ஸான்டிராவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தப்பகுதிக்குள் திருமதி வின்னி மண்டெலா பிரவேசிப்பதற்கு அரசு ஏற்கனவே தடைவிதித்துள்ளது என்பது தெரிந்ததே.

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

ஊர்காவற்றுறையில் அடகு நகை கொள்ளை

யாழ்ப்பாணம், பெப். 17

ஊர்காவற்றுறையில் நகை அடகு பிடிப்பவர் ஒருவரின் வீட்டில் 6 லட்சம் ருபாவுக்கு மேல் பெறுமதியான தங்க நகைகளும் மற்றும் பொருள்களும் கொள்ளை இடப்பட்டன என்று தெரிகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 10.30 மணி அளவில் இச் சம்பவம் நடந்தது.

பதினைந்துபேர் வரையிலான கோஷ்டி ஒன்றே இக் கொள்ளையை நடத்தியதாகக் கூறப்படுகிறது.

கொட்டியா இருக்கா என்று கேட்டுக் கொண்டே கொள்ளையை நடத்தியதாகக் கூறப்படுகிறது.

துப்பாக்கி முனையில் கொள்ளையை நடத்தி முடித்த பின்னர் ஆகாயத்தை நோக்கிச் சுட்டபடியே கோஷ்டி சென்றதாம்.

பயங்கரவாத தடைச்சட்டம்கீழ் 10 சிங்கள இளைஞர்

கொழும்பு, பெப். 17

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பத்து சிங்கள இளைஞர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

யக்கல என்னும் இடத்தில் உள்ள வீடு ஒன்றில் இந்தப் பத்துப் பேரும் கூடியிருந்த சமயத்தில் தான் பொலீஸாரினல் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் இரண்டு பேர் கம்பஹாவைச் சேர்ந்தவர்கள்.

ஏனையோர் குருநாகல், அம்பேபுஸ, இபலகம, கெக்கிராவ, ஹேபந்துடுவ, எந்தரமுல்ல, களனி ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள்.

சகலரும் 20-25 வயதுக்குட்பட்டவர்கள்.

பிரார்த்தனை இயக்கம் ஒத்திவைப்பு

சாவகச்சேரி,பெப்.17

சாவகச்சேரியில் அன்னையர் முன்னணியினரால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரார்த்தனை இயக்கம் நடைபெறவில்லை.

இவ்வியக்கம் இம்மாதம் 27ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

'வாக்கிடோக்கி'யுடன் இருவர் கைது !

கொழும்பு, பெப், 17

கல்குடா பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த ஒரு கான்ஸ்டபிளும் காரைநகர் கடற்படை முகாமைச் சேர்ந்த ஊழியர் ஒருவரும் வாதுவைப் பட்டினத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.

இரண்டு 'வாக்கிடோக்கி' சாதனங்களை இயக்கிக்கொண்டிருக்கையில் இவர்கள் கடந்த வியாழன் கை தானதாகக் கூறப்படுகின்றது.

இச்சாதனங்களை வைத்து இருந்ததற்கான காரணங்களை அவர்களினல் கூறமுடியாது இருந்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

மாணவியும் மாணவர்களும் கைது

கொழும்பு,பெப்'17

விடுதி ஒன்றில் இருந்து ஒரு மாணவியையும் 9 மாணவர்களையும் பொலீஸார் கைது செய்தனர். மாணவியின் வயது 15.

கொழும்பு நுகேகொடையில் உள்ள விடுதி ஒன்றில் தங்கியிருக்கும் சமயத்தில் தான் இவர்கள் கைதாகினர்.

இலவச மூக்குக் கண்ணாடி

வட்டுக்கோட்டை பெப். 17

வட்டுக்கோட்டைப் பகுதியிலுள்ள கண் பார்வை குறைந்த ஏழை மக்களுக்கு கொழும்பு லயன்ஸ் கழகத்திலிருந்து மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக்கொடுக்க வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் முன்வந்துள்ளது.

நவா மினி (உஷா மினி முன்பாக)



MISSING IN ACTION - I, II

10 30, 12 30, 2.30, 4.30, 7.00, 9 30

0 முதன் முதலாக ஒரிஜினல் பிரதியில்

0 (A) கண்டிப்பாக வயது வந்தவர்கட்கு மட்டும்.

0 தடை செய்யப்பட்டது.

தமிழ் மக்கள் இன்று அரசியல் அனாதைகள்

அனாதை இல்ல வைபவத்தில் உரை

நல்லூர், பெப்.17

இன்று தமிழ் மக்கள் அரசியல் அனாதைகளாக இருக்கிருர்கள். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணித்தியாலமும் எமது பிள்ளைகள் அனாதைகள் ஆக்கப்பட்டு வருகிருர்கள்.

திருநெல்வேலி முத்துத்தம்பி அனாதை இல்ல வளவினுள் நூல் நிலையம், அலுவலகம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். தலைமையக உதவி அரசாங்க அதிபர் திரு.க. கோபாலரத்தினம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நூல்நிலையம், அலுவலகம் அமைப்பதற்கான அடிக்கல்லைமுதலில் சைவ அனாதைகள் இல்ல தலைவர் திரு எஸ் ஆர் கனகநாயகம் நட்டார்.

அதனைத் தொடர்ந்து தலைமை அலுவலக உதவி அரசாங்க அதிபர் திரு. க. கோபாலரத்தினம், மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராசா, திரு இ. விஜயரத்தினம்,திரு.ஆர். யுகேந்திரன், சுழிபுரம் விக்ரோயாக் கல்லூரி அதிபர் திரு. க. அருணசலம் மற்றும் பலர் கற்களை நட்டனர்.

திரு. எஸ். ஆர். கனகநாயகம் உரை நிகழ்த்துகையில் தெரிவித்ததாவது,

எமது பகுதிகளை அபிவிருத்திச் செய்ய உதவும் நோர்வே கழகங்களுக்கு நாம் முதலில் நன்றிகூற வேண்டும். நோர்வேக் கழகம் இக்கட்டடத்துக்கான 10 லட்ச ரூபா பணத்தில் முதலில் 60 ஆயிரம் ருபாவை அனுப்பி வைத்துள்ளது-. இப்படி அவர் தெரிவித்தார்.

மற்றும் முத்துத்தம்பி வித்தியாசாலை அதிபர் திரு. எம். முத்துலிங்கம், திரு. க. கனகராசா ஆகியோரும் உரையாற்றினர்.

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த திரு. இ. விஜயரத்தினம் நன்றியுரை கூறினர்.

பனைமரம் வெட்ட புதிய கட்டுப்பாடு

அபிவிருத்தி சபை விதித்திருக்கிறது

யாழ்ப்பாணம், பெப். 17

யாழ்ப்பாண மாவட்டத்தில் கண்டபடி- தேவை எதுவுமின்றி-மிதமிஞ்சிப் பனை மரங்களை வெட்டித் தள்ளுவதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பனை அபிவிருத்தி சபை இது தொடர்பாக யாழ் மாவட்ட உதவி அரசாங்க அதிபர்களுக்கு சுற்று நிருபம் ஒன்றையும் அனுப்பி வைத்து இருக்கிறது.

அவசிய தேவை ஏற்படும் இடத்து மட்டும் பனைமரங்களை வெட்ட அனுமதி வழங்கப்பட வேண்டும்.

அவ்வாறு வெட்டத் தெரிவு செய்யப்படும் பனைமரங்கள் எண்பது ஆண்டுகள் பழைமை வாய்ந்ததாக இருத்தல் வேண்டும். அல்லது எவ்வித பயனும் தராத பனைகளாக இருப்பது அவசியம்.

இவ்வாறு சுற்று நிருபத்தில் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக பனை அபிவிருத்திசபை முகாமையாளர் கலாநிதி எஸ். மோகனதாஸ் உதயனுக்குத் தெரிவித்தார்:

பவளவிழா நிகழ்ச்சிகள்

மானிப்பாய், பெப். 17

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பவள விழாவை முன்னிட்டு பரிசளிப்பு விழா, விளையாட்டுவிழா, கலைவிழா ஆகியன நடைபெற உள்ளன.

இம்மாதம் 28-ம் திகதி பரிசளிப்பு விழா நடைபெறும்.

பரிசளிப்பு விழாவில் யாழ்ப்பாண மாவட்ட புதிய கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து [illegible] ளார். திருமதி. சுந்தரலிங்கம் பரிசில்களை வழங்குவார்.

பவள விழாவை முன்னிட்டு சஞ்சிகை ஒன்றும் அன்றைய தினம் வெளியிடப்பட உள்ளது.

மார்ச் மாதம் 1 ஆம் திகதி கல்லூரியில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும்.

மார்ச் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கலைவிழா நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

கட்டாக்காலி தொல்லை

கிளிநொச்சி, பெப். 17

கிளிநொச்சி, பரவிப் பாஞ்சான், திருநகர்ப் பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் தாக்கத்தினல் நீர்வெறுப்பு நோய்க்கு ஆளான நால்வர் கடந்த சில வாரத்துக்குள் கிளிநொச்சி அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சுருக்கெழுத்து - தட்டெழுத்து பயிற்சிநெறி ஆரம்பம்

மானிப்பாய், பெப்.17

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இயங்கி வரும் முறைசாராக் கல்விப் பகுதியில் சுருக்கெழுத்து- தட்டெழுத்தாளர் பயிற்சி நெறி மிக விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது.

இந்தப் பயிற்சி நெறி ஆங்கில மொழி மூலமே நடைபெறும்.

க. பொ. த. சாதாரண தர பரீட்சையில் (ஆங்கில மொழி உட்பட) சித்தியடைந்தவர்கள் இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்குமாறு மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் திரு வி. மகேசானந்தவேல் அறிவித்துள்ளார்.

குடியியல் பட வரைஞர் பாட நெறிக்கும் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பயிற்சி நெறியும் ஆங்கில மொழி மூலமே நடைபெறும்.

வைத்திய அதிகாரி கைது

தீவிரவாதிகளுக்கு மருந்து வழங்கினராம்

கொழும்பு,பெப்.17

அனுராதபுரத்தில் பணிபுரியும் உதவி வைத்திய அதிகாரி ஒருவரை அனுராதபுரம் பொலீஸ் கைது செய்தது.

வடபகுதி தீவிரவாதிகளுக்கு மருந்துகள் விநியோகஞ் செய்தது என்ற குற்றச்சாட்டின் மீதே பொலீஸார் இவரைக் கைது செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

கைது செய்யப்படும் சமயம் இந்த உதவி வைத்திய அதிகாரி வசம் 30,000 ரூபா பெறுமதியான மருந்துகள் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டதாம்:

வலிபோக்கும் ஊசி மருந்துகளும் அவற்றில் இருந்தனவாம் இம்மருந்துகள் ஆஸ்பத்திரியில் இருந்து அகற்றப்பட்டவையா என்பது பற்றிப் பொலீஸார் விசாரணை செய்கின்றனர்.

யாழ். மண்ணுக்கு தனியான கல்விப் பாரம்பரியம்

யாழ்ப்பாணம்,பெப்.17

யாழ்ப்பாண மண்ணுக்குத் தனித்துவமான கல்விப் பாரம்பரியம் உண்டு. நமது அருமந்த கல்விப் பாரம்பரியத்தைப் பேணிக்காக்கும் பாரிய பொறுப்பு இன்று தமிழ் மகளிரைச் சார்ந்தது.

சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பிரதம கல்வி அதிகாரி திரு. ஆர். சுந்தரலிங்கம் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி. எஸ். பரராசசிங்கம் தலைமை வகித்தார். திரு.சுந்தரலிங்கம் தனது பரிசளிப்பு உரையில் தொடர்ந்து கூறியதாவது:-

''ஒழுக்கம் என்ற பசளையை இட்டு சமய உணர்வு என்னும் நீர் பாய்ச்சி கல்வியாம் பயிரை பாடசாலைகள் வளர்க்க வேண்டும்.

வெறும் ஏட்டுக்கல்வி நல்ல பிரஜைகளை உருவாக்க மாட்டாது. எனவே பாடசாலைகள் மாணவர்களுக்கு வாழ்க்கைக்கு உரிய பயிற்சியை அளிக்க வேண்டும்.

இப்பாடசாலையில் நல்ல நூலகம் இல்லாதது ஒரு பெரும் குறை. ஒரு மாணவனின் ஆளுமை முழுமையாக மலர வாசிப்புப் பழக்கத்தை மாணவரிடத்து விருத்தி செய்ய வேண்டும்'' என்று அவர் பேசி முடித்தார்.

பாடசாலை அபிவிருத்தி சங்க போஷகர் திரு.எஸ். திரவியநாயகமும் உரை ஆற்றினர்.

போட்டிகளில் வெற்றி ஈட்டிய மாணவர்களுக்கு திரு.சுந்தரலிங்கம் பரிசில்களை வழங்கினர்.

மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

உதய சங்கற்பம்

மன ஒருமைப்பாட்டுக்கு அவசியமானது தியானம். தியானத்துக்கு வேண்டியது பக்தி. பக்திக்குத் தேவை நிம்மதி. இம் மூன்றும் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதவை.

—ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர்.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல: 15, 2வது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24805
22078
17-02-86
த. பெ. 28

ஓய்வூதியம்: சிரமம்

இல்லாது பெற வழி உண்டு

தமது மாதாந்த ஓய்வூதியப் (பென்சன்) பணத்தைப் பெறுவதற்காக வந்தமூன்றுதமிழ் வயோதிபர்கள் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாண நகரத்தில் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்கள்.

யாழ்ப்பாணம் கோட்டை இராணுவ முகாமுக்குச் சமீபமாக விளையாட்டரங்கில் உள்ள ஓய்வூதியம் வழங்கும் பணிமனையில் கியூவில் இடம் பிடிப்பதற்காக இந்த முதியவர்கள் சென்றார்கள்.

காலன், கோட்டை முகாமில் இருந்து துப்பாக்கிக் குண்டு வடிவில் வருவான் என்று அவர்கள் நினைத்திருக்கமாட்டார்கள். அதிகாலை வேளையில் நேரத்தோடு போய் இடம் பிடித்துக்கொண்டால், வயோதிப காலத்தில் வேளையோடு வீடுபோய்ச் சேரலாம் என்று தான் அவர்கள் நினைத்திருப்பார்கள்.

இவர்கள் மூவரும் முன்னர் அரசாங்கத்தின் விசுவாச ஊழியர்கள். கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டோடு அரசுக்குத் தொண்டு புரிந்தவர்கள். ஆயினும் அரசாங்கப் படையினர் விட்ட 'குண்டு' அம்புக்குப் பலியாக வேண்டிய பரிதாபநிலை ஏற்பட்டது. இது குறித்து அரசாங்கம் ஒரு அனுதாபச் செய்தியைத்தானும் தெரிவிக்கவில்லை!

அரசாங்க ஊழியராக இருந்தவர்களுக்கான ஓய்வூதியம் அவர்களின் இருப்பிடத்துக்கு மிக அண்மையில் உள்ள தபாற்கந்தோரில் அல்லது வங்கி மூலம் வழங்கப்பட்டு வந்தது.

ஆனால் சமீப காலமாக வடபகுதி ஓய்வூதியக்காரர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். கிராமப்புறங்களில் இருந்து யாழ்ப்பாண நகரத்துக்கு வந்து இராணுவக் கோட்டைக்குச் சமீபமாகச் சென்று ஓய்வூதியத்தைப் பெற வேண்டி உள்ளது. உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஓய்வூதியத்துக்கு வரவேண்டி உள்ளது.

மூப்பும் பிணியும் படுத்தும் கஷ்டத்தை விட ஓய்வூதியத்தைப் பணமாகப் பெறுவதற்குப் படும் கஷ்டம் அவர்களுக்கு அனந்தம். வேறு ஒருவரைத் துணைக்குத் தேட வேண்டிய சிரமம். பயணிகள் நிறைந்த வாகனங்களில் கூனிக்குறுகி நின்று பயணம் செய்து கியூவில் இடம்பிடிக்கும் அவஸ்தை. இப்படிப் பல இன்னல்கள்.

இந்தச் சிரமங்களை நீக்க நல்ல வழி ஒன்று உண்டு. ஓய்வூதியக்காரர் தமதுசொந்தக் கிராமத்திலேயே ஓய்வூதியத்தைப் பணமாகப்பெற வாய்ப்பு இருக்கிறது. ஆனால் அதுகுறித்துப் பலருக்கு இன்னமும் தகவல் தெரியாது.

ஓய்வூதியக்காரரின் நலன்கருதி அது குறித்த தகவல்களை உதயனில் இன்று வெளியிட்டிருக்கிறோம்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் கிராம வங்கிகளில் சேமிப்புக் கணக்கைத் தொடங்கும் ஓய்வூதியக்காரர் ஒவ்வொருவரும் தமது ஓய்வூதியத்தைப் பணமாகப் பெறலாம்.

ஓய்வூதியத்தைக் கிராம வங்கிகளுக்கு மாற்றுவதில் எவ்வித நடைமுறைச் சிக்கலுக்கும் இடமில்லை.

இந்த இலகு திட்டத்தால் எல்லா ஓய்வூதியக்காரர்களும் நன்மை அடைவர். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிராம வங்கிகளில் சேமிப்புக் கணக்கு வைப்போர் எண்ணிக்கை உயரும்; அதனால் கிராம மக்களுக்கும் பலவித நன்மைகள் கிடைக்கும்.

வெளிவாரி பட்டப்படிப்பு

யாழ்ப்பாணத்தில் பரீட்சை நடத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்17

தமிழ் மொழி மூலமான வெளிவாரிப் பட்டப் படிப்புப் பரீட்சையை 1986 முதல் யாழ்ப்பாணத்திலும் நடத்தும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள வெளிவாரி பட்டதாரி மாணவரின் கையொப்பங்களுடன் கூடிய மகஜர் ஒன்றை, இப்பரீட்சையை நடத்தும் பேராதனை வளாக நிர்வாகத்துக்கு அனுப்பி வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மகஜரைப் பூர்த்தி செய்வதற்கு வசதியாக வெளிவாரி மாணவர்கள் அனைவரும் யாழ் கல்வி நிலையத்துக்கு வந்து தங்கள் கையொப்பங்களை வைத்து உதவுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஜே. ஆர்.: இராணுவத் தீர்வை நாடுகிறார்

ராஜீவ்: பொறுமையை இழக்கிறார்

தமிழ்ப்பொதுமக்கள் கொல்லப்படுவது அதிகரித்துள்ளமை, பெரும் மோதல்கள் இடம் பெறுவது,இலங்கை அரசின் கடுமையான போக்கு- ஆகியன புதுடில்லியில் பலத்த கவலையை ஏற்படுத்தியுள்ளன.

— இந்தியாவில் இருந்து வெளிவரும் 'புரொன்ட் லைன்' (பெப். 8-21) ஆங்கில சஞ்சிகையில் இக்கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

'இந்தியாவின் கடுமையான சமிக்ஞை' என்ற தலைப்பில் இக்கட்டுரையை எழுதியிருப்பவர்: மாலினி பார்த்தசாரதி.

அக்கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகிறது.

கொழும்புக்கான தனது விஜயத்தை இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரி திடீர் என்று பின்போட்டார்.

வேறு பல அலுவல்கள் இருந்ததால் விஜயம் பின்போடப்பட்டதாக உத்தியோகபூர்வமாகக் கூறப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாற்றுயோசனைகள் குறித்து இலங்கை அனுப்பிய 'நிராகரிக்கும் போக்கில்' அமைந்த பதில், தமிழ் குடிமக்களுக்கு எதிராக பாதுகாப்புப் படையினரின் வன்செயல்கள் ஆகியன குறித்து இந்தியாவின் எரிச்சலைத் தெரிவிக்கவே திரு. பண்டாரியின் விஜயம் திடீரென்று ஒத்திப்போடப்பட்டது என்பது வெளிப்படை.

அரசியல் தீர்வு காணுவது குறித்து இலங்கை அரசு அடிக்கடி கூறி வந்த அக்கறை மனப்பான்மையில் இந்தியா நம்பிக்கை வைத்து இருந்தது.

அந்த நம்பிக்கையைச் சிதறடிப்பதாக அமைந்துவிட்டது ஜனவரி 30 ஆம் திகதியிடப்பட்டு இலங்கை அரசு அனுப்பிய 57 பக்கப் பதில்.

திட்டமிட்டபடி சென்னை சென்று போராளிகள் குழுக்களுடனும் கூட்டணியினருடனும் திரு. ரொமேஷ் பண்டாரி பேசினார்.

பின்னர் கொழும்புக்குப் போகாமலே புதுடில்லி திரும்பிய பண்டாரி பின்வருமாறு செய்தியாளர்களிடம் சொன்னார்.

"கூட்டணியின் மாற்று யோசனைக்கும் இலங்கை அரசின் பதிலுக்கும் இடையில் பெரிய இடைவெளி உண்டு".

எதிர்பார்த்ததற்கும் குறைவாக உள்ளது என்று கூறி தமிழ் அமைப்புக்களால் நிராகரிக்கப்பட்ட இலங்கையின் ஆரம்ப யோசனைகளிலும் பார்க்க ஏதாவது முன்னேற்றம் 57 பக்கப் பதிலில் காணப்பட்டதா?

இக்கேள்விக்கு திரு. பண்டாரி 'பட்' என்று பதில் சொன்னார். 'அணுவளவும் முன்னேற்றம் காணப்படவில்லை.'

டிசம்பர் முற்பகுதியில் கூட்டணியினர் சமர்ப்பித்த யோசனைகள் முட்டுக்கட்டையை நீக்கி பேச்சுக்கள் மூலம் தீர்வு காணலாம் என்ற புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியது.

இலங்கை அரசின் 'நிராகரிப்பு'ப்பதில், விரைவில் தீர்வு காணும் நம்பிக்கையைச் சிதறடிப்பதாக அமைந்துவிட்டது.

திரு பண்டாரியுடன் புதுடில்லியில் இருந்து சென்னை திரும்பிய கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் சொன்னார்:-

"இலங்கை அரசின் பதில் ஆக்கபூர்வமானதாக இல்லை. எமது யோசனைகள் பற்றிய விமர்சனமாகவே பதில் அமைந்துள்ளது".

"இலங்கையின் ஒற்றை ஆட்சி முறைக்கு விரோதமாக இருப்பதாகக் கூறி எமது யோசனைகளின் அடிப்படைத் தளத்தையே நிராகரிப்பதாக இலங்கையின் பதில் அமைந்துள்ளது."

'இன்றைய அரசமைப்பை தமிழர் என்றும் ஏற்றுக்கொண்டதில்லை.

இந்த அமைப்புக்கு உட்பட்ட எந்தத் தீர்வையும் நாம் நிச்சயமாக எதிர்பார்க்கவில்லை.

இந்திய உதவியுடன் பேச்சுக்கள்மூலம் தீர்வு காண எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளில் இருந்து ஒன்று தெளிவாகிறது. அது அரசமைப்புச் சட்டத்துக்குத் திருத்தம் அத்தியாவசியம் என்பது

—இப்படி திரு. அமிர்தலிங்கம் சொன்னார்.

திருச்சியிலிருந்து டில்லிக்குச் செல்லும்போது இலங்கை அரசின் பதில் குறித்த தங்கள் பலத்த ஏமாற்றத்தை கூட்டணித் தலைவர்கள் பிரதமர் ராஜீவ் காந்தியிடம் கூறினார்கள் என்பது தெளிவாகியது.

கூட்டணியினர் மாற்று யோசனைகளைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் இருந்த நிலையில் இருந்து திரு. ராஜீவ்காந்தியின் எண்ணம் மெல்ல மெல்ல மாறி வருகிறது.

அரசியல் தீர்விலும் பார்க்க இராணுவத் தீர்வில் நாட்டம் காட்டுவதால் ஜெயவர்த்தன அரசுமீது கடுமையான போக்கையும் திரு காந்தி கொண்டு இருக்கின்றார்.

கூட்டணித் தலைவர்களுடன் நடத்திய கலந்துரையாடல், திரு காந்தியின் தற்போதைய மனநிலைக்கு மீண்டும் பலம் கொடுத்து இருக்க வேண்டும்.

திரு பண்டாரியின் விஜயம் கடைசி நிமிடத்தில் திடீர் என்று ரத்துச் செய்யப்பட்டது என்றுதான் இந்தியாவிலும் இலங்கையிலும் அபிப்பிராயம் நிலவுகின்றது.

பெப்ரவரி 7இல் பிரதமருடன் மாலைதீவுசெல்வதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க வேண்டியிருந்ததும் இலங்கைவிஜயத்தை ரத்துச் செய்வதற்கு ஒரு காரணம் என்று திரு. பண்டாரி செய்தியாளர்களிடம் சொன்னார்.

உண்மையில் மாலைதீவு விஜயம் ஏற்கனவே அறிவித்த ஒன்று கொழும்புக்கு திரு. பண்டாரி செல்வார் என்பது அறிவிக்கப்படுவதற்கு 5தினங்கள் முந்தியே மாலைதீவு விஜயம் அறிவிக்கப்பட்டுவிட்டது.

பெப்ரவரி 1ஆம் திகதி வரை கொழும்பு விஜயத்துக்கான ஏற்பாடுகள் துரிதமாகச் செய்யப்பட்டு வந்தன என்பது வெளிப்படை. தருணம்பார்த்துத்தான் இவ் விஜயம் ஒத்திப்போடப்பட்டது.

பெப்ரவரி 4இல் திரு. பண்டாரி கொழும்பில் இருந்திருந்தால் உத்தியோகபூர்வ சுதந்திர தினக் கொண்டாட்டங்களிலும் அவர் பங்குபற்றி இருக்கவேண்டி ஏற்பட்டிருக்கும்.

அப்படிப் பங்குபற்றி இருந்தால், தமிழ்குடிமக்களுக்கு எதிராக வன்செயல் அதிகரிக்கும் தருணத்திலும் அரசியல் பிரச்சினை இழுத்தடிக்கப்படும் நிலையிலும் இரு நாடுகளின் உறவுகள் சீராக இருக்கின்றது என்பதை உணர்த்துவதாக அமைந்து இருக்கும்.

ஜெயவர்த்தன அரசு இராணுவ தீர்வில் நாட்டங்காட்டி வருவது குறித்து திரு. ராஜீவ் காந்தி பொறுமை இழந்து வருவதையே அவரின் அண்மைக் காலப் பேச்சு விளக்குகிறது.

கிளிநொச்சி, முல்லைத்தீவுப்பகுதிகளில் பெரிய அளவில் மோதல் இடம் பெறுவது, தடுமாற்றத்தை ஏற்படுத்தும்அளவுக்குத் தமிழ்க்குடிமக்கள் கொல்லப்படுவது அதிகரித்துள்ளமை, இராணுவத்தீர்வில் ஆர்வம் காட்டும் ஜெயவர்த்தன, லலித் அத்துலத் முதலி ஆகியோரின் கடுமையான போக்கு ஆகியன புதுடில்லியில் பலத்த கவலையை ஏற்படுத்தியுள்ளன.

அந்தக் கவலைதான் சென்னையில் திரு. பண்டாரி வாயில் இருந்து வெளிவந்தது.

'பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணமுடியாது. அரசியல் தீர்வு காணத் தேவையான முயற்சிகளை எடுக்க வேண்டும்' — இப்படி திரு. பண்டாரி சொன்னார்.

(தொடரும்)

பொய்யாமொழி

குறள்:

அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை
வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று.

பொருள்:

அகத்தில் அன்பு இல்லாமல் வாழும் உயிர் வாழ்க்கை வளமற்ற பாலை நிலத்தில் பட்ட மரம் தளிர்த்தாற் போன்றது.

வவுனியா, முல்லைத்தீவில் வீடமைப்புப் பணி துரிதம்

சுமார் 29 லட்சம் ரூபா கடனுதவி

யாழ்ப்பாணம்,பெப் 17

வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் பத்து இலட்சம் வீட்டுத் திட்டத்தின்கீழ், இவ்வாண்டுக்கான வீடுகட்டும் பணி துரிதப்படுத்தப் பட்டுள்ளது.

இம்மாவட்டங்களில் பத்துஇலட்சம் வீட்டுத் திட்டத்துக்குப் பொறுப்பான மாங்குளம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் மாவட்ட முகாமையாளர் திரு. எஸ். சாந்தலிங்கம் இதற்கான நடவடிக்கைகளைத் தீவிரப் படுத்தியுள்ளார்.

இந்தத் திட்டத்தின் கீழ் இவ்வாண்டு வீடுகள் அமைக்கவென வவுனியா மாவட்டத்துக்கு 8 லட்சத்து 56 ஆயிரம் ரூபாவும், முல்லைத்தீவுமாவட்டத்துக்கு 10 லட்சத்து 36ஆயிரம் ரூபாவும், இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியான நகர பிரிவுகளுக்கான வீடமைப்புத் திட்டத்துக்கு 10 இலட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தநிதியில் வவுனியா மாவட்டத்தில் 168குடும்பங்களுக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 182குடும்பங்களுக்கும் வவுனியா நகரப் பகுதியில் 125 குடும்பங்களுக்கும் புதிய வீடுகள் அமைக்கவும், வீடுகள் திருத்தவும், மலசலகூடங்கள் அமைக்கவும், மின்வசதி நீர்வசதி ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளவும் கடனுதவி வழங்கப்படும்.

இவ்வாண்டுக்கானவீடமைப்புத் திட்டத்துக்கு முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மாங்குளம் கிராமத்திலும் துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் யோகபுரம் கிராமத்திலும், முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தண்ணீரூற்றுக் கிராமத்திலும் —

வவுனியா மாவட்டத்தில் நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கனகராயன்குளக் கிராமத்திலும், செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஆண்டியா புளியங்குளம் கிராமத்திலும் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு வீடமைக்க கடன்கள் வழங்கப்படஇருக்கின்றன,

கோப்பாயில் ஊர்காவல் அணி விழிப்புக் குழு தீர்மானம்

நல்லூர், பெப்.17

கோப்பாய் கிராமத்தின் முழுப் பிரதேசத்திலும் செயற்படக் கூடிய ஊர்காவல் அணி ஒன்று நிறுவப்பட வேண்டும்.

கடந்த வாரம் நடைபெற்ற கோப்பாய் விழிப்புக் குழுவின் மாதாந்தக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

தலைவர் திரு. எஸ். சபாரத்தினம் தலைமையில் மேற்படி கூட்டம் நடைபெற்றது.

கிராம மக்கள் மத்தியில் எழும் பிணக்குகளையும் பிரச்சினைகளையும் சமாதான முறையில் தீர்க்கக்கூடிய 7 பேர் கொண்ட விசாரணை சபை ஒன்றினை அமைத்து செயல்படுவதென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கிராமத் தலைவர்கள் கூட்டம்

பலாலி, பெப் 17

கிராமிய ஒருங்கிணைந்த சுகாதாரத் திட்டத்தினை நடைமுறைப்படுத்த, யாழ் குடாநாட்டில் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களது தலைவர்களை – யாழ் மாவட்ட சுகாதார பெரும்பாக இயக்குநர் எதிர்வரும் 20ம் திகதி யாழ் இராமநாதன் கல்லூரியில் சந்திக்கிறார்.

மின்சார அபிவிருத்தி வேலை நாரந்தனைப் பகுதியில் இல்லை

பொதுமக்கள் விசனம்

ஊர்காவற்றுறை, பெப்,17

யாழ்ப்பாண அபிவிருத்திச்சபையின் நாரந்தனை உப அலுவலகப் பகுதியில் எவ்வித மின் அபிவிருத்தி வேலைகளும் இடம் பெறவில்லை. இதனால் சுருவில், நாரந்தனை [illegible] பொது மக்கள் விசனமடைந்துள்ளனர்.

1985ம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டில் இவ் வலுவலக மின்சாரப் பகுதிக்கு பல இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் அபிவிருத்தி வேலைகள் ஒன்றும் இது வரை ஆரம்பிக்கப்படவில்லை

[illegible] மாத்திரம் அந்த அந்த [illegible] ப்பட்டுள்ளன. ஆனால் பல மாதங்களாகியும் இது வரை அவை நிறுத்தப் படவில்லை.

பல வருடங்களுக்கு மேலாக வீடுகளுக்கு மின் இணைப்பு செய்துவிட்டு காத்திருக்கும் பல குடியிருப்பாளர்கள் எப்போது மின்சாரம் வழங்கப்படும் என்பதை அறிய ஆவலாயுள்ளனர்.

இதுபற்றி யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கு புகார் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது

தொழு நோயாளர் அபிவிருத்தித் திட்டம்

நாடகம் மூலம் நிதி வசூல்

வட்டுக்கோட்டை, பெப். 17

லயன்ஸ் கழகம் சுழிபுரத்திலுள்ள காட்டுப்புலம் தொழுநோயாளர்களின் அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பயன்படுத்துவதற்காக 5 ஆயிரத்து 750 ரூபாவைச் சேகரித்திருக்கிறது.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் கடந்த மாதம் நடத்தப்பட்ட நாடகத்தின் மூலமே இந்த நிதி சேகரிக்கப்பட்டது.

இந்த நிதியைக் கொண்டு காட்டுப்புலம் தொழு நோயாளர்களது அவசிய அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகளை லயன்ஸ் கழகம் செய்து வருகிறது.

வட்டுக்கோட்டை

சாவகச்சேரி சந்தைக்கு

புதிய மண்டபங்கள்

சாவகச்சேரி, பெப். 17

சாவகச்சேரிச் சந்தையில் பொருள்களை வைத்து விற்பனை செய்யும் வியாபாரிகளது வசதியை முன்னிட்டு சுமார் ஒரு இலட்ச ரூபா செலவில் இரு மண்டபங்கள் கட்டப்படுகின்றன.

கட்டட வேலைகள் அண்மையில் ஆரம்பமாகின

புதியகட்டடம் அமைக்கப்பட்டதும் சந்தையில் நெருக்கடி குறையும் எனவும் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு இது வசதியாக அமையும் எனவும் நகர சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உணவு முத்திரை விநியோகம் புலோலியில்

நாகர்கோயில், பெப்.17

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மீனவர்களுக்கான தற்காலிக உணவு முத்திரை பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு வை. வேலும்மயிலுவின் பணிப்புரைக்கமைய புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணிமனையில் வைத்து கடந்த வாரம் விநியோகிக்கப் பட்டது.

அண்மையில் பருத்தித்துறையில் ஏற்பட்ட பதற்றநிலை காரணமாக பொது மக்கள் அங்கு செல்ல அஞ்சியதனால் உணவு முத்திரை விநியோகம் புலோலியில் நடைபெற்றதென உயர் அதிகாரி 'உதயன்' செய்தியாளரிடம் தெரிவித்தார்.

அதிசய ஆட்டுக்குட்டி

சாவகச்சேரி, பெப். 17

புலோலி தெற்கில் உள்ள விவசாயி ஒருவரது வீட்டில் ஆடொன்று அதிசயமான குட்டியொன்றை ஈன்றுள்ளது.

ஒருதலையுடனும் எட்டுக்கால்களுடனும் காணப்படும் இந்த ஆட்டுக்குட்டிக்கு தலையைத்தவிர ஏனைய உறுப்புக்கள் யாவும் இரண்டு குட்டிகட்கு உரியவையாகக் காணப்படுகின்றன.

சுகமாக உள்ள இந்த ஆட்டுக்குட்டியின் எட்டுக்கால்களில் நான்கு ஓரளவு சோர்வாகக் காணப்பட்டாலும் அவைகளில் உணர்ச்சி இருக்கக் காணப்பட்டது.

ஆனால் நான்கு கால்களில் குட்டி உஷாராக இருக்கிறது.

இக்குட்டியை பலர் வந்து பார்த்துச் செல்கின்றனர்.

ரெலிபோன் வாங்க
☎
ரெலிகுளோப்
இரவு பகல் 24 மணி சேவை
ரெலி: 25088 (6 தொடர்புகள்)

உதயன்
17. 02. 1986

ரெலிபோன் பேச
☎
ரெலிகுளோப்
இரவு பகல் 24 மணி சேவை
ரெலி: 25088 (6 தொடர்புகள்)

யாழ். மாவட்டத்தில்

ஓய்வூதியம் கிராம வங்கியில் சுலபமாகப் பெறலாம்

யாழ்ப்பாணம், பெப். 17

யாழ். மாவட்ட ஓய்வூதியக்காரர்கள் சுலபமாகத் தமது ஓய்வூதியத்தை கிராம வங்கிகள் மூலம் பெறுவதற்கு வழிசெய்யப்பட்டு உள்ளது.

யாழ்ப்பாண கூட்டுறவுத் திணைக்கள சிரேஷ்ட பரிசோதகர் ஒருவர் உதயனிடம் இத்தகவலை வெளியிட்டார். இத்திட்டத்தை அவர் பின்வருமாறு விளக்கினார்:-

ஓய்வூதியக்காரர்கள் பென்சன் பெறுவதில் உள்ளகஷ்டங்களை ஆராய சுமார் ஆறுமாதங்களுக்கு முன்னர் மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. யாழ். மாவட்ட சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. கே. சண்முகலிங்கம் தலைமையில் கூடிய இம்மாநாட்டில் கச்சேரி அதிகாரிகள், கூட்டுறவு அதிகாரிகள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் கலந்து கொண்டார்கள்.

இம்மாநாட்டில் கிராம வங்கிகளின் மூலம் ஓய்வூதியம் வழங்கும் திட்டம் தயாரானது. யாழ். மாவட்டத்தில் 22 கிராம வங்கிகள் இயங்குகின்றன.

ஓய்வூதியக்காரர்கள் இந்தக் கிராமவங்கிகளில் சேமிப்புக் கணக்குகளை முதலில் ஆரம்பிக்கவேண்டும். பின்னர் தமது ஓய்வூதியத்தை அந்தக்கிராம வங்கிக்கு மாற்றும்படி கோரிக்கை அனுப்ப வேண்டும்.

அவ்வாறு ஓய்வூதியத்தை மாற்றும்படி வேண்டும்போது சேமிப்பு கணக்கு இலக்கத்தையும் குறிக்க வேண்டும்.

இந்த அடிப்படையில் இவர்கள் தமது ஓய்வூதியத்தை மாதந்தோறும் பணமாக குறிப்பிட்ட கிராம வங்கியில் சுலபமாகப் பெறமுடியும் — என்று அந்த அதிகாரி விளக்கினார்.

ஓய்வூதியம்பெறுவோர் நலன்புரி கழக உத்தியோகத்தர் ஒருவர் ''இத்தகைய சுலபமான வாய்ப்பு உள்ளபோது, ஓய்வூதியக்காரர் உயிரைப் பணயம் வைத்து கியூவில் நிற்க வேண்டுமா?'' என்று கவலை தெரிவித்தார்.

மக்கள் விரோத செயல்களைத் தவிர்க்க கோருகிறது 'ரெலோ'

சென்னை, பெப். 16

மக்கள் விரோத நடவடிக்கைகளைத் தவிர்த்து மக்களுடன் இரண்டறக் கலப்பதன் மூலம் தம் தேவைகளை ஸ்தாபனங்கள் பூர்த்தி செய்து கொள்ள முடியும்.

தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) இங்கு (சென்னையில்) விடுத்த அறிக்கை ஒன்றில் இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:-

குடாநாட்டில் மீண்டும் அதிகரித்து வரும் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக நாம் பெரிதும் வருந்துகின்றோம். போலி வேஷங்களுடனும் புரட்சிகர முத்திரைகளுடனும் உலாவரும் இக்கொள்ளையர்களை மக்கள் இனங்காணுதல் இன்றைய அவசிய தேவையாகும்.

அண்மையில் இடம்பெற்ற நியூ லலிதா பட்டறைக் கொள்ளையர்கள் எம்மால் இனங்காட்டப்பட்டனர். அவர்கள் கொள்ளையிட்ட நகைகளை மீளவும் ஒப்படைக்கப்படுவதாக ஒப்புதல் அளிக்கப்பட்டதன் பேரில் பறிகொடுத்த உரிமையாளர்களுக்கு கொள்ளையர்கள் இனங்காட்டப்பட்டு கண்டித்து விடுதலை செய்யப்பட்டனர்.

மீண்டும் வேலணை, சுருவில் எனும் இடத்தில் 14-02-86 அன்று இடம்பெற்ற 6 லட்சம் ரூபா கொள்ளை தொடர்பானவர்கள் ஈழத் தேசிய விடுதலை முன்னணியில் அங்கம் வகிப்பவர்களே ஆவர்.

கொள்ளைச் சம்பவம் நடைபெற்ற சமயம் இரவு 10 மணியளவில் சைக்கிளில் வந்த எம் தோழர்கள் இருவர் கொள்ளையர்களுக்காக காவல் நின்றவர்களினால் தடுத்து நிறுத்தப்பட்டனர். இவர்கள் எம் தோழர்களைத் தடுத்து நிறுத்தியதாலேயே எம்மால் இவர்களை இனங்காண முடிந்தது. தோழர்கள் விடுதலை செய்யப்பட்டவுடனேயே கொள்ளைச் சம்பவம் இடம் பெற்ற வீட்டாரிற்கும் அவர்கள் இனங்காட்டப்பட்டனர்.

இவ்வாறான மக்கள் விரோத நடவடிக்கைகளைத் தவிர்த்து இனிமேலாவது மக்களுடன் இரண்டறக் கலப்பதன் ஊடாக தம் தேவைகளை ஸ்தாபனங்கள் பூர்த்தி செய்ய முடியும் என எதிர்பார்க்கிறோம். -இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பாம்பு கடித்து இளம்பெண் பலி

நல்லூர் பெப். 17

பாம்பு கடித்துப் பத்து நாட்களுக்குப் பின் இளம் பெண் ஒருவர் நேற்று யாழ் வைத்தியசாலையில் மரணமானார்.

பூநகரியைச் சேர்ந்த செல்வரத்தினம் பராசக்தி (வயது 28) என்ற பெண்ணே மரணமானவர் ஆவார்.

கடந்த ஆறும் (6) திகதி பூநகரியில் உள்ள அத்தாய் என்ற இடத்தில் அரிவு வெட்டிக் கொண்டிருக்கும் பொழுது அவருக்குப் பாம்பு கடித்தது.

அறிவிழந்த நிலையில் யாழ் வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்ட அவர் அங்கு பின்னர் மரணமானார்.

இவரது மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. க கேசவன் நடத்தினார்.

பாம்புக்கடியால் ஏற்பட்ட மரணம் என தீர்ப்பு வழங்கப்பட்டது.

குண்டு மழை..

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

சின்னப்பு முருகேசு, (63வயது) கந்தசாமி விமலராஜன் (19 வயது) ஆகியோர் டளையில் துப்பாக்கிச்சூட்டுக்கிலக்காகி யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அங்கு நடந்த சம்பவம் பற்றி சின்னப்பு முருகேசு மேற்கண்டவாறு தெரிவித்தார். இவருக்கு நெஞ்சில் காயம் ஏற்பட்டுள்ளது பேரனுக்கு இடுப்பில் தலையில் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

சின்னப்பு முருகேசு மேலும் சொன்னதாவது

பகல் 11 மணியளவில் நானும் எனது பேரனும் கடையில் வியாபாரங்களை நடத்திக்கொண்டிருந்தோம்.

அப்பொழுது வானத்தில் சிறிய விமானமும், ஹெலிக்கொப்டரும் சுட்டுக் கொண்டே பறந்து வந்தன.

நாம் பயத்தினால் கடையை இலேசாகப் பூட்டிவிட்டு கடை வாசலில் வந்து நின்றோம்.

அப்பொழுது எமது கடைகளை நோக்கி குண்டு மழை பொழிந்தது.

எமது கடை ஓடுகள், தகரங்கள் குண்டு பட்டுச் சிதறின

பயத்தினால் மறைந்து ஒதுங்கி இருந்தபொழுது ஊசி மாதிரி எனது நெஞ்சை ஏதோ துளைத்தது. கையால் பொத்தியபடி அப்படியே இருந்துவிட்டேன்.

சற்று நேரத்தில் எனது பேரனும் கத்தியபடி அந்த இடத்திலே விழுந்தார். இருவருக்கும் இரத்தம் ஓடிக்கொண்டிருந்தது.

குண்டுகள் தொடர்ந்து விழுந்துகொண்டே இருந்தன.

சுமார் இரண்டு மணித்தியாலங்களின் பின்னரே எம்மால் அந்த இடத்தை விட்டு அசையக்கூடியதாக இருந்தது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அமிர்தலிங்கத் ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சினையை சர்வதேச கவனத்திற்குக் கொண்டு வருவதற்கும் வசதியாகவே திரு அமிர்தலிங்கத்தை இந்திய லோக சபை இடைத் தேர்தலில் போட்டியிட வைப்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. — இவ்வாறு இங்கு பரவலாகப் பேசப்படுகிறது.

என் கண்..:

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

காயங்கள் ஏற்பட்டுள்ளன.

யாழ் ஆஸ்பத்திரியில் வைத்து அவர் மேலும் சொன்னதாவது:

எழுதுமட்டுவாளில் இருந்து பளைக்கு சென்று கொண்டிருந்த மினிபஸ்ஸில் நான் பயணம் செய்துகொண்டிருந்தேன்

பஸ் முகமாலைக்கு சமீபமாக போய்க்கொண்டிருக்கும் பொழுது ஹெலிகொப்டர் ஒன்று தாழப் பறந்து வந்துகொண்டிருந்தது

உடனே பஸ்ஸில் இருந்த நானும் வேறு சிலரும் பஸ்ஸை நிறுத்தும்படி சொன்னோம்.

'ஹெலிக்கொப்டரால் சுடப்போறான்கள்' என்றும் கத்தினோம்.

பஸ் நிற்கவில்லை. நன்றாக கிட்டத் தாழப் பறந்து வந்த ஹெலிக்கொப்டர் எமது பஸ்மீது சுடத் தொடங்கியது. சுமார் 15 நிமிடங்களாக பஸ்ஸை நோக்கி துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

பஸ்ஸினுள் மரண ஓலம் எழும்பியது. சூடு பட்ட மூவர் என் கண் முன்னாலேயே சுருண்டு விழுந்து துடிதுடித்து மரணமானார்கள்.

பஸ்ஸின் கண்ணாடிகள் யாவும் சிதறிப் பறந்தன. எனக்கும் கையில் காயம் ஏற்பட்டது. மற்றவர்களுக்கும் காயம் ஏற்பட்டது.

உடனே பஸ்ஸினுள் இருந்து குதித்து அருகில் இருந்த மரங்களுக்குள் மறைந்துகொண்டோம். வேறு சிலர் நிலத்தில் படுத்துவிட்டனர்.

பின்னர் ஹெலிக்கொப்டர் தூரத்தே சென்றுவிட்டது

அதன் பின்னர் அருகில் உள்ள ஒரு வீட்டிற்குச் சென்றோம். அங்கு காயமடைந்த வேறு ஐந்து பேர் இருந்தனர்.

அவர்களுடன்காரொன்றில் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு வந்து அங்கிருந்து யாழ் ஆஸ்பத்திரிக்கு வந்தேன்.

இப்படி அவர் தெரிவித்தார்.

காரை வட்ட,..

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

எனக்கும் சாரதிக்கும் காயங்கள் ஏற்பட்டன.

நேற்று ஹெலிக்கொப்டர் சூட்டுக்கு இலக்காகி காயங்களுடன் யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் தம்பிராசா லிங்கம் (18 வயது) இப்படித் தெரிவித்தார்.

இவருக்கு இரண்டு கைகளிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளன கார்ச் சாரதி கைமுறிந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

காரின் முன் பக்க கண்ணாடிகள் முற்றாக உடைந்து நொருங்கியுள்ளன.

இச்சம்பவம் பற்றி யாழ் வைத்தியசாலையில் வைத்து அவர் மேலும் சொன்னதாவது:-

நேற்றுக் காலை ஒன்பது மணியளவில் பளையில் இருந்து சாவகச்சேரி போவதற்காக பஸ்ஸிற்கு காத்து நின்றேன்.

அப்பொழுது பஸ்கிடைக்காததனால் இடையில் கண்ட இந்தக் காரில் ஏறினேன்.

காரினுள் மொத்தமாக நான்கு பேர் இருந்தோம்.

எமது கார் எழுதுமட்டுவாளை அண்மித்துக்கொண்டிருக்கும் பொழுது ஆனையிறவுப் பக்கத்தில் இருந்து ஹெலிக்கொப்டர் ஒன்று சுமாரான தூரத்தில் பறந்து கொண்டிருந்தது.

பின்னர் கார் எழுதுமட்டுவாளை அடைந்ததும் ஹெலிக்கொப்டர் திரும்பி வந்து 10 நிமிடமாக எமது காரைச் சுற்றி வட்டமிட்டது.

அப்பொழுது ''காரை நிறுத்திவிட்டு இறங்கி ஓடுவோம்'' என சாரதியிடம் கூறினேன்.

அதற்கு அவர் அது ஒன்றும் செய்யாது என்று தொடர்ந்தும் காரைச் செலுத்திக் கொண்டிருந்தார்.

ஹெலிக்கொப்டர் மிகவும் தாழப்பறந்து காருக்கு முன்னால் வந்து காரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

இதனால் காரின் கண்ணாடிகள் உடைந்து நொருங்கின. காரும் சேதமானது. கார்ச் சாரதிக்கு கைமுறிந்து விட்டது. எனக்கு கைகளில் காயங்கள் ஏற்பட்டன.

உடன் கார் நிறுத்தப்பட்டது. ஹெலிக்கொப்டர் போய் விட்டது.

பின் அந்த வீதியால் வந்த லொறி மூலம் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு சாரதி கொண்டு போகப்பட்டார்.

நான் மோட்டார் சைக்கிளில் யாழ் ஆஸ்பத்திரிக்கு வந்தேன். -இவ்வாறு அவர் தெரிவித்தார்.

படைகள்-போராளிகள்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரொக்கெட் லோஞ்சர்கள் மற்றும் நவீன ஆயுதங்களைப் பயன்படுத்தி தாக்குதல் நடத்தியதாகத் தெரிகிறது

போராளிகளின் தாக்குதல்களினால் ஆயுதப் படையினரின் மூன்று வாகனங்கள் பலத்த சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதைத் தொடர்ந்து படையினர் சிறிய விமானங்களிலும், ஹெலிக்கொப்டர்களிலும் வானத்தில் வட்டமிட்ட வண்ணம் குண்டுமாரி பொழிந்தனர்.

சம்பவம் நடந்த இடத்தைச் சூழ்ந்த பகுதிகளில் பொதுமக்களின் உயிருக்கும், உடைமைக்கும் பலத்த சேதம் ஏற்பட்டது.

எனினும் செய்தி அச்சுக்குப் போகும் வரை அவை பற்றிய விவரங்கள் எதுவும் ஊர்ஜிதப் படுத்தப்படவில்லை.

நேற்று நடைபெற்ற சம்பவங்களையடுத்து இயக்கச்சி, குறிஞ்சாத்தீவு, பளை மற்றும் அயல் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற சகல வாகனங்களும் நேற்று முழுவதும் கொடிகாமத்திற்கு அப்பால் செல்லாமல் திரும்பின.

தொண்ட---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மலையகத்தில் வன்செயல்கள் வெடிக்கத் தொடங்கிய பின்னர் திரு. தொண்டமான் மீதான ''தாக்குதல்''கள் கூடின.

'தாக்குதல்தான் சிறந்த தற்பாதுகாப்பு வழி' என்று திரு தொண்டமான் கூறியதைத் தொடர்ந்து, அமைச்சர் தொண்டமானை அரசு கைது செய்ய வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா அரசாங்கத்தைக் கேட்டிருந்ததும் தெரிந்ததே.

இந்த மோதலின் உச்சக்கட்டமாகவே அமைச்சர் தொண்டமான் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட உள்ளது.

நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடர் பெப்ரவரி 20 இல் அங்குரார்ப்பணஞ் செய்யப்பட இருக்கிறது.

அதன் பின்னர் நம்பிக்கையில்லாப் பிரேரணை தாக்கல் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காயமடைந்தோர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள்.

5. கந்தசாமி விமலராஜன் தாளையடிவாசி (வயது 19) இவருக்கு இடுப்பிலும், தலையிலும், கையிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளன,

6. தம்பிராசா லிங்கம் (வயது 18) பளைவாசி. இவருக்கு இரண்டு கைகளிலும் காயங்கள்.

பிரிட்டிஷ் பெண்..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தலை செய்யப்படும் நேரத்தை அறிவிப்பதற்கு 'ஈரோஸ்'! நிபந்தனை விதித்துள்ளது.

இன்று திங்கட்கிழமை அதிகாலை தொடக்கம் இரவு பொழுது சாயும் வரை வட இலங்கையில் யுத்த நிறுத்தத்தை ஆயுதப்படைகள் மேற்கொள்ள வேண்டும் என்பதே அந்த நிபந்தனையாகும்.

ஜனவரி 17 இல் இப்பெண் கடத்தப்பட்டார். இவருக்கும் இலங்கை அரசுக்கும் இடையே தொடர்பு இருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

ரயில்---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

களினால் மறிக்கப்பட்டது.

வழமைக்கு மாறாக ரயில் பிரயாணிகள் அனைவரையும் ரயிலை விட்டு இறங்குமாறு அந்தச் சிப்பாய்கள் உத்தரவிட்டனராம்.

நிகழப்போகின்ற அசம்பாவிதத்தை தூரத்தில் முகாமில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த இராணுவ உயர் அதிகாரி ஒருவர், தமக்கு அருகில் இருந்த சில சிப்பாய்களையும் அழைத்துக் கொண்டு ரயிலை நோக்கி விரைந்தார்

பிரயாணிகளை ரயிலை விட்டு இறங்குமாறு உத்தரவிட்ட சிப்பாய்களை உடனடியாக முகாமுக்குத் திரும்பும்படி அவர் கட்டளையிட்டார்.

பிரயாணிகளை ரயிலில் ஏறி பிரயாணத்தைத் தொடரும்படி அவர் கேட்டுக்கொண்டார்.

உயர் அதிகாரியின் கவனத்தினால் பிரயாணிகள் மயிரிழையில் உயிர் தப்பியதாகக் கூறப்படுகிறது,

ஜே. ஆருடன்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

பேச்சுக்களை நடத்த முடியும் என்று கருதப்படுகிறது.

உத்தேச சுயாட்சி அமைப்பின் தன்மை, வரையறை ஆகியவை குறித்து பயனுள்ளபேச்சுக்களை நடத்த சரியான சூழ்நிலை இருக்க வேண்டும் என்பதே இந்தியாவின் கருத்து.

இரு பகுதியினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அடிப்படையில்தான் மேலும் பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டும்.

அதற்கு முதல் தமிழர் கோரிக்கைகள் குறித்து திரு. ஜெயவர்த்தன எந்தளவுக்குப் போகத் தயாராக இருக்கிறார் என்பது தெரியவேண்டும்.

அதை எழுத்தில் பெற வேண்டும். அதற்கு திரு. ஜெயவர்த்தனவை இணங்கச் செய்ய வேண்டும் அல்லது நிர்ப்பந்தம் கூட அவர்மீது செலுத்த வேண்டும்.

மாகாண சபைகளை யூனியன் பிரதேசங்கள் போன்று கருதக் கூடியதான சில அரசமைப்பு நடைமுறைகளைக் கொண்டுவருவதற்கு இலங்கை அரசு முயற்சிக்கிறது.

அதன்படியும் மாகாண சபைகள் யூனியன் பிரதேசமாக அழைக்கப்படமாட்டா. ஆனால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியினதும் நாடாளுமன்றத்தினதும் சுயாட்சி வழங்கப்படாத அமைப்பாகத்தான் அவை இருக்கும்.

இலங்கைஅரசமைப்புக்குட்பட்டு, பெரும்பாலும் இந்திய மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையே மாகாண சபைகளுக்கு வழங்க இலங்கை முதலில் ஒப்புக்கொண்டிருந்தது.

ஒப்புக்கொண்டது

அப்படி ஒப்புக்கொண்ட விடயத்தில் இருந்து வேறுபாதையில் செல்வதற்கு இலங்கை அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள், இலங்கைப் பிரச்சினையைக் கையாளும் இந்திய அதிகாரிகளைக் குழப்பி அடித்துள்ளன.

தற்போது இலங்கைத் தூதுவர் பெர்னட் திலகரத்தின நடத்தும் பேச்சுக்கள் மீண்டும் கொழும்புக்கு திரு ரொமேஷ் பண்டாரி விஜயம் செய்வதற்கான தளத்தை தயாரிக்க உதவ முடியும்.

அத்துலத் 'அவுட்!'

பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதில் காணப்படும் முட்டுக்கட்டை, திரு. ஜெயவர்த்தனவுடன் நடத்தும் நேரடிப் பேச்சுக்களால் மட்டுமே அகற்றப்பட முடியும்.

திரு அத்துலத் முதலி போன்றவர்கள் தூது வருபவர்களினால் அந்த முட்டுக்கட்டையை அகற்ற முடியாது.

திரு. அத்துலத் முதலியுடன் இனியும் பேச்சுக்களை நடத்த வேண்டும் என்பதில் இந்திய அரசுக்கு அக்கறை கிடையாது.

இராணுவ அட்டூழியங்களுடன் திரு. அத்துலத் முதலி நெருங்கிச் செயல்படுவதே இந்தியாவின் இப்போக்கிற்குக் காரணமாகும்''—

இப்படி திரு. ரெட்டி 'இந்து'வில் எழுதியிருக்கிறார்.

தெல்லிப்பழை கிருஸ்ஹொப்பேஸ் வெற்றியீட்டியது

காங்கேசன்துறை, பெப்.17

தெல்லிப்பழை கிருஸ்ஹொப்பேஸ் விளையாட்டுக்கழகம் உதைப்பந்தாட்ட மோதல் ஒன்றில் அளவெட்டி - டயானா விளையாட்டுக் கழகத்தை 2 1 கோல்களால் வென்றது.

இளவாலை பொருளாதார கலாசார வளர்ச்சிச் சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் ஓர் அங்கமாக மேற்படி இரு கழகங்களும் மோதின.

கப்டன் தயாளனின் தலைமையில் ஆடிய கிருஸ்ஹொப்பேஸ் விளையாட்டுக் கழகம் ரவிசந்திரன், பிரபாகரன் ஆகியோர் போட்ட இரு கோல்களை அடுத்துவெற்றிபெற்றது.

இதனை எதிர்த்து ஆடிய அளவெட்டி டயானா விளையாட்டுக் கழகம் ஒரு கோலைப் போட்டது. 2-1 கோல்களால் கிருஸ்ஹொப்பேஸ் வெற்றியீட்டியது.

மேற்படி உதைந்தாட்ட சுற்றுப் போட்டியில் இடம்பெற்ற ஏனைய சிலபோட்டிகளின் முடிவுகள் வருமாறு:-

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை பொழுதுபோக்கு கழகம் அளவை யுத் ''பி'' பிரிவை 2-1 கோல்களால் வென்றது.

அளவெட்டி செங்கதிர் விளையாட்டுக் கழகம் அராலி சில்வெஸ்டர் விளையாட்டுக் கழகத்தை 2-1 கோலால் வென்றது.

மயிலிட்டி கண்ணகி கழகம் அளவெட்டி மரீனா விளையாட்டுக் கழகத்தை 9-0 கோல்கலால் வென்றது

தெல்லிப்பழை கிருஸ்ஹொப்பேஸ் காங்கேசன்துறை சிமெந்து பொழுது போக்கு கழக கோஷ்டியுடன் மோதிய சமயம் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

மற்றொரு போட்டியில் அளவெட்டி யுத் விளையாட்டுக் கழகம் கிருஸ்ஹொப்பேஸ் விளையாட்டுக் கழகத்தை 4-1 கோலால் வென்றது.

சொரியல் காணியை விரும்பாத பாங்கில் சுயாட்சி கோரும் தமிழர்

'ஈழமுரசு' விழாவில் வித்தி

யாழ்ப்பாணம், பெப். 17

சொரியல் காணி உடைமை முறையை தமிழ் மக்கள் எப்போதுமே விரும்புவதில்லை. அதே போலத்தான் இன்று, அரசியல் பொருளாதார அமைப்பில் தமக்குரிய தாயக எல்லையை வகுத்து அவர்கள் சுயாட்சி கோருகிறார்கள்.

ஈழமுரசு செய்திப் பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழா ஞாயிறு (16-2-86) காலை நடைபெற்ற பொழுது தலைமை வகித்த யாழ் பல்கலைக் கழக துணை வேந்தர் பேராசிரியர் எஸ். வித்தியானந்தன் இவ்வாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறியதாவது:-

செய்திப் பத்திரிகைகள் பத்திரிகா தருமத்தைப் பேணிக் காக்க வேண்டும்.

சொரியல் காணி உடைமை முறையை தமிழ் மக்கள் எப்போதுமே விரும்புவதில்லை. அதேபோலத்தான் இன்று அரசியல் பொருளாதார அமைப்பில் தமக்குரிய தாயக எல்லையை அவர்கள் வகுத்து சுயாட்சி கோருகிறார்கள்.

சொரியலாக ஒரு தமிழ் தினசரி போதாது பல்வேறு தமிழ் தினசரிகள் வேண்டும் என்று இன்று யாழ்ப்பாணத்தில் மூன்று தினத்தாள்கள் மலருகின்றன. ஒரு மரம் தோப்பாகாது என்று யாழ்ப்பாணத்தில் இருந்து மூன்று தமிழ் தினசரிகள் வெளிவருவது இனிய செய்தி.

மலர் வெளியீட்டுரை நிகழ்த்திய பேராசிரியர் கா. சிவத்தம்பி பின்வருமாறு கூறினார்:-

போராட்ட நிகழ்வுகளின் மத்தியில் இலக்கியம் படைக்கும் முயற்சிகளும் தொடரவேண்டும். சுதந்திரத்தின் பின் இலக்கியம் என்று படைப்பாளிகள் சோர்ந்திருக்க முடியாது.

எழுத்துப் பிரசவம்இங்கேதான் நிகழவேண்டும். இந்தப் பிரசவம் வெளியே நிகழ முடியாது. அந்தப் பிரசவத்தை இறக்குமதி செய்ய முடியாது.

இப்படி பேராசிரியர் சிவத்தம்பி தனதுரையில் குறிப்பிட்டார்.

ஈழமுரசு பொது முகாமையாளர் திரு. கே. எஸ். அருமைரத்தினம் வரவேற்புரை கூறினார். வித்துவான். க. சொக்கன், யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம், அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

ரெலிகுளோப் உரிமையாளர் திரு. எம். சிவராசா சிறப்பு மலரின் முதற் பிரதியை துணை வேந்தரிடம் இருந்து பெற்றுக்கொண்டார்.

ஈழமுரசு ஆசிரியர் திரு. எஸ். திருச்செல்வம் நன்றியுரை கூறினார்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: த ஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
வெளியிட்ட திகதி 17 . 2 . 1986